**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.116/2020**

**PW-4**

03.02.2026

| | | | |
|---|---|---|---|
| **Name** | **திரு. சுரேஷ்** | | |
| **த/பெ.** | **திரு. பெருமாள்** | **Calling** | **விவசாயம்** |
| **Village** | **பள்ளிவிடை** | **Religion** | |
| **Taluk** | **இலால்குடி** | **Age** | 47/2026 |

**அரசு தரப்பில் முதல் விசாரணை-**

**நான் தற்போது இலால்குடி பள்ளிவிடையில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன் . வழக்கின் விபத்து சம்பவத்தில் இறந்துபோன மணிவேல் எங்கள் ஊரை சேர்ந்தவர்தான் . கடந்த 27.10.2019 அன்று நான் திருச்சியிலிருந்து வீட்டிற்கு செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தபோது எனக்கு முன்னால் மணிவேல் இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டு இருந்தார் . பணமங்களம் பிரிவு ரோட்டில் சாலையை கடந்து எங்கள் ஊருக்கு செல்லவேண்டும் . பணமங்கள் பிரிவு ரோட்டை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலை கடந்து சென்றபோது சென்னையிலிருந்து திருச்சி நோக்கி வந்த இனவோ கார் அதிவேகமாக வந்து மணிவேல் மீது மோதி விபத்து ஏற்பட்டது . சம்பவ இடத்தில் விபத்து ஏற்படுத்திய இனவோ கார் அருகில் நின்றது அதை ஓட்டிய நபரை நான் பார்த்தேன் . அவருடைய பெயர் விஜயபாரதி என்றும் கோடம்பாக்கம் சென்னை என்று சொன்னார் . அந்த நபரை தற்போது பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-xxxxx

Taken down by me in open court , read over to her and accepted by her as correct and made her signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.